

# தமிழ் முருகன்

அறிவுமதி

மின்நூல் PDF வடிவில்

# தமிழ் முருகன்

வரலாறு



அறிவுமதி

தர்மலிங்கம் அறவழித் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளைக்காக
நான்காம் தமிழ் பதிப்பக வெளியீடு




நானிருக்கும் கோயிலிலே
வேலிருக்க
வேண்டும்
வேலிருக்கும் கோயிலிலே
நானிருக்க
வேண்டும்

நானிருக்கும் கோயிலிலே
தமிழிருக்க
வேண்டும்
தமிழிருக்கும் கோயிலிலே
நானிருக்க
வேண்டும்

நானிருக்க
வேலிருக்க
நல்ல
தமிழ்
தானிருக்க

என்னுடைய கோயிலிலே
தமிழ்
முருகன்
என்னுடைய கோயிலிலே
எவனெவனோ
எவளெவளோ
வந்தங்கு
ஏனிருக்க
வேண்டும்

அறிவுமதி



அப்பா
தர்மலிங்கம்
அவர்கள் நினைவாக
இந்நூல்...



உருவாக்கம்

த. மணிவண்ணன்

HISTORY OF
**THAMIZH MURUGAN**

ARIVUMATHI©
arivumathi@hotmail.com



தமிழ் முருகன் வரலாறு
அறிவுமதி

**அச்சுப்பதிப்புகள்**
முதல் பதிப்பு: மே 2018
இரண்டாம் பதிப்பு: சனவரி 2019
பதிப்பாசிரியர்: த.மணிவண்ணன்
நூலழகு: பா.ஏகலைவன்
நூல் வடிவழகு: இரா.செந்தில் குமார்
**அச்சாக்கம்**:
விஸ்வா பிரிண்ட்ஸ், வண்ணாரப்பேட்டை, சென்னை 600081.
**வெளியீடு**:
தர்மலிங்கம் அறவழித் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளை,
எண் 182, 4வது பிரதான சாலை, ஸ்ரீ ஐயப்பா நகர், விருகம்பாக்கம்,
சென்னை 600082. அலைபேசி: +91 87544 48079
மின்னஞ்சல்: DharmalingamCET@gmail.com

**மின்நூல் பதிப்பு — பிடிஎஃப் வடிவம்**
வெளியீடு: செப்டம்பர் 2020
பதிப்பாசிரியர்: த.மணிவண்ணன்
தொகுப்பாசிரியர்: ஜி.கௌதம்
தர்மலிங்கம் அறவழித் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளைக்காக
வெளியிடுவது: நான்காம் தமிழ், ஸ்கேபிடல் ஜி மீடியா பிரைவேட்
லிமிடெட், சிவ சக்தி இல்லம், 3/22 A. சுரேஷ் நகர் முதல் தெரு,
வளசரவாக்கம், சென்னை 600087. அலைபேசி: +91 98410 77789,
மின்னஞ்சல்: info@capitalGGroup.com



# என்னுரை

இந்த முருகன்
புனைந்த கதையன்று,
வாழ்ந்த வரலாறு!

இந்நூலின் அச்சுப்பதிப்புகள்
கடந்த 2018 ஆம் ஆண்டு மே திங்களிலும்
2019 ஆம் ஆண்டு சனவரி திங்களிலும்
வெளியாகின.
தன் தந்தை தர்மலிங்கம் அவர்களின்
நினைவாக நடத்தும்
தர்மலிங்கம் அறவழித் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளை
சார்பில்
இதன் அச்சு நூலைப் பதிப்பித்தார்
என் தமிழண்ணன்
த.மணிவண்ணன்.

கடந்த சில திங்கள்களாகவே
பல்வேறு நாடுகளிலிருந்து
ஓயாமல் என்னை அழைத்தவர்கள்,
இந்த நூல் எங்கு கிடைக்கும்
எனக் கேட்டார்கள்.
கேட்க வைத்தவர்..
இந்தத் தமிழ்முருகன் நூலை
உலகத்தமிழர்களை
இவ்விதம் தேடவைத்தவர்..
அன்பின்
சுகி.சிவம் அவர்கள்.
அவருக்கு நன்றி!



# என்னுரை

சமய, மத அடையாளங்கள்
அழுக்குப்படுத்துவதற்கு முந்தைய
மூத்த
மூத்த
காலத்தவன்
தமிழ்முருகன்.
குறஞ்சித் தமிழ்முருகனுக்குச்
சந்தனமே
குறியீடு!
மற்றெல்லாம்
தவறீடு!
இனப்பிழை!

தமிழ்முருகன் கோயில்களைத்
தமிழுணர்வாளர்கள்
அமைப்பதெனில்,
கோயிலுக்குள்
கொற்றவைத்தாய்,
முருகன்-வள்ளி
வேல், சந்தனம், தமிழ்
இவை மட்டுமே
இடம் பெறல்
அழகு!

இந்தக் கருத்துகளுக்குட்பட்டு
சங்க இலக்கியப் பாடல்களில்
பதிவு செய்யப்பட்டிருக்கும்
தமிழ் முருகன் வரலாற்றை
நினைவுறுத்துவதே
இந்நூலின் மையப்பொருள்.





## என்னுரை


இந்த என் தமிழ் முருகன் நூலைத்
தங்கள் ஊடகப் பயனுக்குப்
பயன்படுத்துகிறவர்கள்
இந்த நூலின்
ஆய்வுப்பொருண்மையை மீறி
தங்கள்
சமய, மத, இயக்கப் பிழையான
கருத்துகளுக்குத்
தவறாகப் பயன்படுத்திவிடாதீர்கள்.

தமிழ் வாழ்க!
தமிழினம் வாழ்க!
தமிழ் முருகன் வாழ்க!

-

**உங்கள்..**
**அறிவுமதி**
**28.09.2020**





மாமல்லபுரம் புலிக்குகை அருகில் ஆழிப்பேரலைத் தோண்டித் தந்த முருகன் கோயில் - கல்வேல்

அச்சுப் பதிப்பில் வெளியான
**வாழ்த்துரை**




## அய்யா
## நல்லகண்ணு

கவிஞர் அறிவுமதி அவர்கள் சிறந்த கவிஞர். பல கவிஞர்களை உருவாக்கியவர். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த பற்று கொண்டவர். சங்கப்பாடல்களில் உள்ள தமிழகத்தின் இயற்கையோடிணைந்த கருத்துகளை, அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய தமிழில் ஆனந்த விகடன் மற்றும் சில இதழ்களில் எழுதியிருக்கிறார்.

கவிஞர் அறிவுமதி தம் கவிதைகளில் தமிழ் மொழியின் சிறப்புடன் சாதி மத பேதமில்லாத பகுத்தறிவின் கருத்துகளை வலியுறுத்துபவர்.

ஆன்மிகவாதிகள் தங்களை கடவுள் ஒன்று என்ற கருத்துள்ளவவர்கள் எனச் சொல்லி வந்தாலும் புதுப்புது தெய்வங்களை உருவாக்கிக் கோயில்களையும் கட்டிவிட்டார்கள்.



# வாழ்த்துரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன தமிழ் மக்களின் வாழ்க்கையிலிருந்து ஐந்திணைக் கோட்பாடாக உருவாக்கப்பட்டவை. தமிழ் மக்களின் வாழ்வில் முகிழ்ந்த குறிஞ்சியும் நெய்தலும் இணைந்த இலெமூரியாக்கண்டம் கடல் கொண்டுள்ளது என்ற உண்மை, வரலாற்று ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் முக்கியக் கடவுள் முருகன் என்பதை அறிவுமதி ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். கந்தன், சிவன், பிள்ளையார், என்பவையெல்லாம் பின்னால் உருவாக்கப்பட்டவை. வேதகாலக் கடவுள்களை இணைக்கும் நோக்கத்துடன் திரிக்கப்பட்டவை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆய்வறிஞர் பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள், தமிழ்நாட்டில் பிள்ளையார் என்ற தெய்வம் உருவாவதற்கு முன்பே முருகன் தான் தமிழர்களின் கடவுளாகக் கருதப்பட்டார் என்ற கருத்தைப் பாராட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

அந்தக் கருத்துகளுக்கு மேலும் வலுசேர்க்கும் முறையில் கற்சிலைகளையும் ஆதாரங்களாகக் காட்டியிருப்பது கவிஞர் அறிவுமதியின் சிறப்பு.

நண்பர் திரு. த.மணிவண்ணன் அவர்கள் தம் தந்தை தர்மலிங்கம் அவர்களின் நினைவு நாளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறார். தமிழ்ப் பற்றாளர் என்ற முறையில் கவிஞர் அறிவுமதியின், 'தமிழ் முருகன் வரலாறு' என்ற இந்த அழகிய நூலை அவரது தந்தையின் நினைவாக வெளியிடுவதைப் பாராட்டுகளுடன் வாழ்த்துகிறேன்.

**அன்புடன்**
**இரா. நல்லகண்ணு**

**சென்னை**
**23.05.2018**



“

**செங்களம் படக்கொன்று அவுணர்த்**
**தேய்த்த செங்கோல் அம்பிற்**
**செங்கோட்டு யானைக் கழல்தொடிச்**
**சேஎய் குன்றம் குருதிப் பூவின்**
**குலைக்காந் தட்டே** (குறுந்தொகை -1)

”

யானைப் படையோடு வந்து களத்தில் போரிட்டுப் பகைவர்களை
மிச்சமற்று இல்லையாக்கி வெற்றி கண்ட முருகன் ஆட்சி செய்யும்
இந்த மலை நெடுகப் பூத்துக் குலுங்குகின்றன காந்தள் பூக்கள்!

அச்சுப் பதிப்பில்
வெளியான
**என்னுரை**



## அறிவுமதி

தாய்க்கடவுள்.. கொற்றவை.
தமிழ்க் கடவுள்.. முருகன்..
இது நம் தமிழர் வழிபாட்டு வரலாறு.

என்று?

என்றோ,
என்றோ!!!

இன்றில்லை..
நம் முருகன்
தமிழ் முருகனாய்
இல்லை, இன்றில்லை.
இன்றுள்ள முருகன் நம் முருகன் இல்லை.

அவன், முருகன்.. ஸ்ரீமுருகனாகி.. சுப்ரமணியனாகி.. கார்த்திகேயனாகி.. தண்டாயுதபாணியாகி.. ஆறுமுகனாகிப் போனான். ஆறுபடை வீடுகளில் அவன்



'தமிழ் முருகனாக' ஒரு வீட்டிலும் இல்லை. சமக்கிருதப்பிள்ளை ஆக்கப் பட்டான். தமிழர்களின் பழைய திருமண அழைப்பிதழ்களில் கட்டாயம் இருந்த 'முருகன் துணை' இன்று இல்லவேயில்லை. தமிழர் வீட்டின் முன் வைக்கப் படுகிற கண்ணாடிக்குள்ளான அய்ந்தாறு கடவுளர் படங்களில் ஓரங்கட்டப்பட்ட அப்பாவியாய்.. நம் பாட்டன் முருகன்.

நாடாண்ட மன்னன்.. யானையின் மீதும்.. நாவாயின் மீதுமாய் சினந்து சென்று தமிழினம் காக்கப் போரிட்ட பேரன்புத் தலைவனை.. மன்னனை.. கோவணாண்டியாக்கி.. அவனை வழிபட்டால் பிச்சாண்டியாகி விடுவாய் என அச்சுறுத்தி.. நம்மை அவனிடமிருந்துப் பிரித்து நமக்குத் தொடர்பில்லாத கடவுளர்ப் பொய்களை நம் தலையில் கட்டிக்கொண்டே இருக்கிறது.. ஒரு கூட்டம்.

நாமும் அவற்றை நம்பினோம். இன்னும் நம்பிக் கொண்டிருக்கின்றோம்.

மருத்துவம் படித்திருந்தாலும் சரி.. பொறியியல் படித்திருந்தாலும் சரி.. கணினி படித்திருந்தாலும் சரி.. நம் மூளையை நம்பாத தாழ்வு மனப்பான்மையிலேயே தமிழர்கள் அமிழ்ந்து கிடக்கிறோம்.

பெற்றெடுக்கும் தமிழ்ப் பிள்ளைக்குத் தமிழ்ப் பெயர் வைக்கக் கசக்கிறது. பொறியியல், மருத்துவம் படித்தத் தமிழ் மூளைகள் இரண்டும் இணைந்து.. தம் பிள்ளைக்குப் பெயர் வைக்க இயலாமல், முதல் எழுத்து என்னவாக இருக்க வேண்டும் என்று எவரென்றே தெரியாதவரிடம் போய் காசு கொடுத்துக் கேட்பவர்களாக தமிழர்கள் இருக்கிறோம். செருமனியில் அப்பாவுக்கு நினைவுச் சடங்கு நடத்த பிரான்சிலிருந்து..



வானூர்தியில் இலட்சங்கள் செலவு செய்து அர்ச்சகரை அழைக்கிற தமிழ் உறவுகள்.. இன்றும், இன்றும். ஏன் அப்பாவின் படத்திற்குப் பூப்போட்டு வணங்கி நன்றி செய்து அந்த இலட்சங்களை அங்கே முதியோர் இல்ல அம்மா அப்பாக்களுக்கு அனுப்பி உதவினால் அப்பா மகிழ மாட்டாரா?

தமிழ் முறையில் திருமணம் செய்யவும், தன்னை உருவாக்கிய தாய் தந்தையை வைத்து கட்டிய புதிய இல்லம் திறக்கவும் மனசற்றப் பெருங்கூட்டமாய் தமிழ்க்கூட்டம்.. தமிழ்நாடு நெடுக.. அய்யங்கார் பேக்கரி, ஆரியபவன், கும்பகோணம் டிகிரி காபி.. இவை, தமிழர்தம் அடிமை மனோபாவ உளவியல் சிக்கலையே வெளிச்சம் போட்டு உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. நம் அறிவு எவருக்கும் தாழ்ந்ததில்லை என்பதை அனிதாக்கள் உயிரைக் கொடுத்து உச்சரித்தபோதும்.. நாம் உணரத் தயாராக இல்லை.

படிக்க திருக்குறள், வணங்க முருகன்.. என்ற தளத்திலும்கூட, நம் முருகனை.. நன்றியோடு நாம் வணங்க இயலாமல் செய்து விட்டார்கள்.

தமிழ்நாட்டில் உடைக்கப்படுகிற மலைக்கற்களில் உருவாக்கப்படுகிற வழிபாட்டுச் சிலைகளில்.. ஒரு சிலைகூட தமிழ் முருகனாக இல்லை.

தமிழ் பேசத் தெரியா சூழலிலும் முருகன் வழிபாட்டைத் தம் தமிழின அடையாளமாகப் போற்றும் மொரீசியசு தமிழர்களின் தைப்பூசப் பெருவிழாவைப் பின்னுக்குத் தள்ள வேறொரு இரவு விழாவை உள் நுழைக்கும் சூழ்ச்சியைக் கேள்விப்படுகையில் வலிக்கிறது.

இனியும் ஏமாந்தால் நம் முருகன் தமிழ் முருகனாக மட்டுமன்று தமிழர்களின் முருகனாகக்கூட வழிபட வாய்ப்பில்லாமல் போய் விடும். பகவத்கீதைக்கு மாற்றாகத் திருக்குறள் தீபாவளிக்கு மாற்றாகப் பொங்கல் என்பனபோல் வேற்றுக் கடவுள்களுக்கு மாற்றாக முருகனை வரலாற்றுச் சான்றுகளோடு தமிழர்கள் உயர்த்திப்

பிடித்தல் இன்றைய சூழலில் இன்றியமையாத வரலாற்றுக் கடமை என்பதை உணர்ந்தே இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏராளமான இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் கீழடிகளையும் ஆதிச்சநல்லூர்களையும் நடுகற்களையும் வைத்துக் கொண்டு நம் முருகனை ஒரு தலை முருகனாய் மீட்கத் தவறினால் நம் தலை பயனற்றதாகிவிடும்.

அண்ணன் த.மணிவண்ணன் அவர்கள்.. தூய தமிழ் நெஞ்சர். தம் உயிருக்கினிய தந்தை தர்மலிங்கம் அய்யா அவர்களின் நினைவாகத் தமிழ் முருகன் குறித்த ஒரு நூலை.. எளிய தமிழரும் எளிதில் புரிந்து கொள்ளும்படி எழுதித் தருமாறு வற்புறுத்தினார்.


வினாவிடை உத்தியின் விரல்பிடித்து இந்த நூலை எழுதியிருக்கிறேன். தமிழ் முருகன் குறித்த குறிப்புகள் இன்னும் இலக்கியங்களில் ஏராளமாய் உள்ளன. மலேசியா, மொரீசியசு போன்ற நாடுகளில் கள ஆய்வுகளும் செய்ய வேண்டியுள்ளன. ஒரு கவிதையாய், இதை நான் எழுதிய எண்பதுகளில், அதைப் படித்து உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்திற்கு என்னைத் தேடி வந்து, 'எப்படியடா இப்படிச் சிந்தித்தாய்' என்று கேட்டு, கட்டியணைத்துப் பாராட்டிய மானுடவியல் அறிஞர் நா. வானமாமலை அவர்களே, இந்த நூலின் ஆக்கத்திற்கும் அடிப்படையாக இருக்கிறார்.


தமிழறிஞர் தொ.பரமசிவன், குமரி முருகன் சிந்தனைக்குத் தட்டிக் கொடுத்தவர்.

உடன் பிறந்தார்.. பா.ஏகலைவன், வடிவமைப்பாளர் இரா. செந்தில்குமார் இருவரின் உற்சாக உழைப்பிலும் அம்பத்தூர் மணி, சேது ஒத்துழைப்போடும் இந்தத் 'தமிழ் முருகன்' உங்கள் கைகளில்...


**சென்னை**
***23.05.2018***

உங்கள்
**அறிவுமதி**





1858ல் மதுரை
திருப்பரங்குன்றம்.அரிய புகைப்படம்.



## முருகன் என்றால் யார்?

முருகன் என்றால் தமிழ்க் கடவுள்.

## கடவுள்கள் என்றால் மத அடையாளங்களில் தாமே இருக்கிறார்கள்?

முருகன் மட்டும் இதற்கு விதிவிலக்கு. காலத்திற்கு முந்தைய சங்கப் பாடல்களது சான்றுகளின்படி முருகனுக்கு மத அடையாளம் கிடையவே கிடையாது. இன அடையாளம் மட்டுமே உள்ளது.

பரிபாடல், திருமுருகாற்றுப்படை நூல்களில் காலத்துக்குப் பிந்தைய கட்டுக் கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. காலத்திற்கு முந்தைய வரலாற்று முருகன் காலத்திற்குப் பிந்தைய புராண முருகன் என இருவேறு தன்மையில் ஆய்வுச் செய்யத்தக்க அளவில் சங்க இலக்கியங்களில் தரவுகள் உள்ளன.

இதில் நான் காலத்திற்கு முந்தைய வரலாற்று முருகனைப் பற்றியே பேசுகிறேன். இவருக்கு மத அடையாளம் அற்ற இன அடையாளமே உள்ளது.

## தமிழ் முருகன் என்றால் கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் முருகனை வழிபடுகிறவர்களாக, முருகனின் பொருள்தரும் பெயர்கள் சூட்டியுள்ளவர்களாக இன்றும் இருக்கிறார்களே?

முருகனின் காலத்தில் அவர்களும் தமிழின அடையாளத்தோடு.. தமிழ் பேசுபவர்களாக... தமிழர்களாக இருந்திருக்கிறார்கள் என்று பொருள்.





குறிஞ்சி மலர்

முருகன் போரிற் சிறந்த 'திராவிடத் தெய்வம்' என்று பேராசிரியர் க.வித்யானந்தன், தமிழர் சால்பு என்ற தம் நூலில்..பக்கம் 85ல், குறிப்பிட்டிருப்பது இதனால்தான்.

### போரிற் சிறந்த தெய்வம் என்றால்?

**மு**ருகன் மிகச்சிறந்த போர் வீரன் என்று பொருள்

### போர் வீரன் என்றால்?

**இ**ராணுவக் கட்டமைப்புகளோடு ஒரு மலையும் கடலும் சார்ந்த நாட்டை ஆண்டுவந்த மன்னன் என்று பொருள்.

### ஒரு கடவுளைப் போய் எப்படி மன்னன் என்று சொல்லலாம்?


**ஆ**ள்பவர்கள்தாம் ஆண்டவர்களாக ஆகிறார்கள். மண்ணை ஆள்பவர்களாக தம் மக்களின் மனசுகளை ஆள்பவர்களாக அவர்கள் ஆள்கிற போது ஆண்டவர்களாக.. கடவுளர்களாக. தெய்வங்களாக. வழி வழி மரபில் நன்றி சொல்லும் வகையில் வழிபாட்டுக்குரியவர்களாக காலம் கடந்து அந்த மன்னர்கள், அந்த மன்னர் சார்ந்த வீரர்கள் போற்றப்படுகிறார்கள்.


### அப்போ.. முருகன்.. வெறும் மனிதன்தானா?

**வெ**றும் மனிதன் இல்லை.. வீர மனிதன். வெற்றித் தமிழன். நிலப் போரிலும் சிறந்தவன். கடற் போரிலும் சிறந்தவன்.

### சான்றுகள் ஏதேனும் ஒன்றிரண்டு தரமுடியுமா?

**ஏ**தேனும் ஒன்றிரண்டா! ஏராளமாகத் தரமுடியும்.





| | |
|---|---|
| வேல்போர்ச் சேய்.. | - மலைபடுகடாம் (493) |
| வேல்போர்க் கொற்றவைச் சிறுவ.. | - திருமுருகாற்றுப்படை (258) |
| கடம்பமர் நெடுவேள்.. | - பெரும் பாணாற்றுப்படை (75) |
| திருத்தகு சேய்.. | - புறநானூறு (கஉரு.20) |
| செருமிரு சேய்.. | - அகநானூறு.. (உசாசா.21) |
| செருமிகு சேய்.. | - புறநானூறு (கச.19) |


இவை மட்டுமல்ல.. சங்கப் புலவர்கள் தம் வாழும் காலத்து மன்னர்களைப் புகழ, இந்த வரலாறு படைத்த முருக மன்னனைப் போன்ற வீரமுள்ள மன்னன் இவன் என்று உவமையாகச் சொல்லிய எடுத்துக் காட்டுகளும் ஏராளமாக உள்ளன.


| | |
|---|---|
| முருகுடன்று கறுத்த | - பதிற்றுப்பத்து உசா.12 |
| முருகு உறழப் பகை | - மதுரை காஞ்சி181 |
| முருகற் சீற்றத்து உருகெழு குரிசில் | - பொருநராற்றுப்படை131 |
| முருகற் சீற்றத்து உருகெழு குரிசில் | - புறநானூறு கசா.12 |
| முருகனன்ன சீற்றத்து | - அகநானூறு கருசா.16 |

**இவ்வளவு சான்றுகளா! நம்பவே முடியவில்லையே! அதுசரி.. குறிஞ்சி நில மன்னன் என்றுதானே முருகன் சொல்லப்படுகிறான். அது எப்படி.. நெய்தலோடும் இணைக்கிறீர்கள்?**

நானா இணைக்கிறேன்?!

'கடல் வயிறு கிழித்த
மலை நெஞ்சு
பிளந்தாங்கு





அவுணரைக் கடந்த
சுடரிலை
நெடுவேல்'..
என்ற சிலப்பதிகார (23.188-190) வரிகள் நாவாய்களில் போய் எதிரிகளோடு போரிட்டு வென்றவன் முருகன் என்று இளங்கோ சொல்லியிருக்கிறார்.. கடற்போரிலும் முருகன் சிறந்தவன் என்று, நானா இணைக்கின்றேன்.!


**சரி, சரி, சான்றுகளோடுதானே சொல்கிறீர்கள். அதை எப்படி ஏற்காமல் இருக்க முடியும்! ஆனாலும் குறிஞ்சியோடு, நெய்தல்.. என்பது சரியாகப் புரியவில்லையே?**

பஃறுளி யாற்றுப்
பன்மலை
அடுக்கத்துக்
குமரிக்
கோடும் கொடுங் கடல்
கொள்ள..

சிலப்பதிகாரத்தின் (காடுகாண் காதை 11,19-20)
இந்த வரிகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் இல்லையா?

ஆமாம். அந்தக் குமரிக் கோடுகள் சூழலில் பிறந்து, வாழ்ந்து.. அரசுக் கட்டிலில் அமர்ந்து ஆண்டு, போரில் சிறந்து வாழ்ந்த காலத்து மன்னன்தான் முருகன். மலை நில வாழ்வையும் கடல் நீர் வாழ்வையும் ஒரு சேர வாழ்ந்த வாழ்வின் தமிழன்தான் முருகன்.

குறிஞ்சிக்குத் தலைவன் முருகன் என்று கூறுதல் முழுமையான உண்மையாகாது.


குறிஞ்சி
நெய்தல்
இணைந்த
வாழ்வே தமிழர்தம்
குமரிநில வாழ்வு
கோபுரங்களையும் கருவறையின் மீதான
விமானத்தையும் மலைகளாகப் பாருங்கள்
அகழியைக் கடலாகப்
பாருங்கள்

**கடுஞ்சின வாள்வேள்**
**களிறு ஊர்ந்தாங்கு**
என்கிற பதிற்றுப் பத்தும் 11.6

**சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து**
**அமர் உழக்கி..**
என்கிற பரிபாடலும் 5.2

**ஓடாய் பூட்கைப் பிணிமுகம்**
**வாழ்த்தி**
என்கிற திருமுருகாற்றுப்படையும் 82,110, 257


மலைநிலப் போர்களில்.. யானையின் மீது அமர்ந்து போய்
எதிரிகளோடு போரிட்டு வென்ற முருகன் பற்றிப் பெருமிதத்தோடு
பாராட்டி மகிழ்கின்றன.

அதே நேரத்தில் கடலிலும் நாவாய்களில் போய்.. போரிட்ட முருகனின்
வீரத்தையும் சங்க இலக்கியங்கள் பல இடங்களில் பதிவு செய்துள்ளன.
எனவேதான் முருகன் குறிஞ்சி நிலத்தோடு நெய்தல் நிலத்திற்கும்
உரியவனாகிறான்.
திருச்செந்தூர் நெய்தல் நிலம்தானே!

**திருமணி விளக்கின் அலைவாய்ச்**
**செருமிகு சேய்**
261:புறநானூறும்

**'வெண்டலைப் புணர் மலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறை'** 55:புறநானூறும்
திருச்செந்தூர் நெய்தல் நில முருகனைப் பதிவு செய்கின்றன.

26



நாடன் என்கோ
ஊரன் என்கோ
பாடு இமிழ் கடற் சேர்ப்பன் என்கோ

என்ற 49 வது புறநானூறு இந்த மன்னனைக் குறிஞ்சி நிலக்காரன் (நாடன்) என்பேனா, மருத நிலக்காரன் (ஊரன்) என்பேனா, நெய்தல் நிலக்காரன் (சேர்ப்பன்) என்று சொல்வேனா என்று சொல்வதாலும் இதனை உய்த்துணரலாம்.

## இன்று அந்த முருகன் ஆண்ட மலை எங்கே?

எங்கேவா? கடல் விழுங்கிவிட்டது என்கிறார் இளங்கோ அடிகள்.

குமரிக்கோடும்
கொடுங்கடல் கொள்ள..
என்று அவர் சொல்வது இதைத்தான்.

## 'குமரி' என்றால் என்ன?

குமரி என்றால் கற்றாழைச் செடி,

குறிஞ்சிச் செடிகள் அதிகமாக விளைகிற இடத்திற்குக் குறிஞ்சி என்றும், முல்லைக்கொடி அதிகமாக விளைகிற இடத்திற்கு 'முல்லை' என்றும் சொல்வது போலத்தான்..

'குமரி' என்கிற கற்றாழை அதிகமாக விளைகிற இடத்தைக்..'குமரி' என்று அழைத்திருக்கிறார்கள்.

குமரிக் கண்டம்
குமரிக்கோடு
இன்று.. குமரி முனை
குமரி மாவட்டம்
என்பதெல்லாம் அதன் அடிப்படையில்தான்.



படிகாரக் கல்
குமரி என்கிற கற்றாழை
கடல் உயிரி
தேங்காய்
சங்கு




### தமிழர்கள் தங்கள் விடுகளின் வாசல்களில் கற்றாழைச் செடிகளைத் தொட்டிகளில் வைக்கிறார்களே.. அதற்கும் இதற்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா?

இருக்குமாவா? இருக்கிறது. நாங்களெல்லாம் 'குமரிக் கண்டத்துத் தமிழர்கள்' என உலகுக்கு உரத்துச் சொல்கிற அடையாளப் பழக்கம்தான் அது.

### திருஷ்டிக்காக வீட்டின்முன் கட்டுகிற பொருள்களில் ஒன்றாகவும் கற்றாழை இருக்கிறதே?

திருஷ்டிக்காகக் கட்டப்படுவதல்ல அது. ஆழிப் பேரலை எந்த நேரத்திலும் வந்து விடலாம் என்கிற எச்சரிக்கையோடு கட்டப்படுகிற, தம் இன உயிர்களைக் காப்பதற்கான முதலுதவிப் பொருள்கள்தாம் அவை.

### படிகாரக் கல்..

கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்ட ஊருணி நீரை உடனே குடிக்க முடியாதல்லவா. அதனால் குடங்களில் ஊருணி நீரை எடுத்து.. படிகாரக் கல்லை... பானையின் உள்ளே தீற்றினால்.. வண்டல் கீழே போய் விடும். அதன் பின்பு நீரைக் காய்ச்சிக் குடிக்கலாம், என்பதற்காகத்தான்.

### கற்றாழை..

ஆழிப் பேரலை வந்து போன பிறகு.. பசிக்குப் பயன்படும் முதல் பொருள் கற்றாழைதான். அதனால்தான் கற்றாழைச் சோறு.. சோற்றுக் கற்றாழை என்றெல்லாம் இதனை அழைத்தார்கள்.
உடலில் ஏற்படும் பெரிய காயங்களுக்கும் கற்றாழையே மிகச் சிறந்த மருந்து.





## தேங்காய் நெற்று

தாய்களை இழந்த குழந்தைகளுக்கான இரண்டாம் தாய்ப் பாலாய் தேங்காய்ப் பால் பயன்படும் என்பதற்காக.

## சங்கு போன்ற கடல் பொருள்கள்?

ஆழிப்பேரலை நினைவின் எச்சங்கள்.

ஆழிப் பேரலையின் அச்ச உணர்வில் தமிழினம் காக்க வீட்டு வாசலின் முன்பு கட்டித் தொங்கவிடப் படும் இந்த.. அறிவியல் சார்ந்த உயிர்காப்புப் பொருள்களையா திருஷ்டிக்காக என்று தவறுதலாக புரிந்து கொண்டோம். கோயில்களின் கலசங்களில் வரகு வைப்பதும் ஆழிப்பேரலையின் அச்சத்தில்தான். ஏறக்குறைய தமிழினம் காக்கும் விதை வங்கிகளே கலசங்கள். இனி எல்லோருக்கும் இந்த உண்மையை எடுத்துச் சொல்வோம்.

## அப்போது நாமெல்லாம் குமரிக் கண்டத்தில் உயிர் நீத்த அந்த நம் மூத்தோர்களின் மிச்சமா?

ஆம். சரியாகச் சொன்னாய். குமரிக்கண்டத்தின்.. ஆழிப் பேரலையில் பெருந்தொகையாக இழந்த நம் மூதாதையர்களை.. திருவள்ளுவர் 'தென்புலத்தார்' என்கிறார்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை** 5:இல் வாழ்க்கை:3
தம் இனத் தமிழர்களைப் பற்றிய வள்ளுவரின் பதிவு இது.

**பாண்டியன் பல்யாகசாலை**
**முதுகுடுமிப் பெருவழுதியை**







நெட்டிமையார் எனும் புலவர்
புறநானூறு 9ல் பாடுகையில்.. பாடிய வரிகள் மிக.. மிக.
இன்றியமையாத வரிகள்.

தென்புல வாழ்நர்க்கு
அருங்கடன் இறுக்கும்
பொன்போல்
புதல்வர்ப் பெறாதீரும்.

'தென்புலத்தார்' என்பதற்கு உரையாசிரியர்கள், 'இறந்து தென்திசையில் வாழும் முன்னோர்' – என்கிறார்கள்.

குமரி முனைக்குத் தெற்கே ஒரே நேரத்தில் ஆழிப் பேரலையின் கொடுமையால்.. இழந்த பெருந்தொகையான மூத்தோரின் எண்ணிக்கையை ஈடுகட்ட.. தமிழ் மக்கள் தொகையைப் பெருக்கவேண்டிய கடமையின் அருமையை உணர்த்தத்தான் புலவர் 'பொன்போல்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்.


இன்றும் தமிழர்களின் பழக்க வழக்கங்களில் ஒன்றான 'தெற்கே கால் நீட்டிப் படுக்கக் கூடாது' என்பது.. நம் தமிழ் மூத்தோர்களை அவமானப் படுத்தக் கூடாது என்கிற நோக்கில்தான்.

பல்வேறு வகையான காவடிகளோடு இன்று வரையும் பழனி போன்ற முருகன் கோயில்களை நோக்கி வழிநடைப் பாடல்களோடு இலட்சக் கணக்கானத் தமிழர்கள் நடந்து கொண்டே இருப்பதைப் பார்க்கிறோம்.

இதுவும்கூட.. ஆழிப் பேரலை அவலத்தில்.. காவடிகளில் இரண்டு பக்கமும் கிடைத்த மிச்சப் பொருள்களைத் தூக்கிக்கொண்டு நடந்த.. தமிழர்களது இடப் பெயர்வின் போலச் செய்தல்தான்.







முருகப் பேரரசுக்குரிய மலை, கடலில் மூழ்கிய வலியை நீக்கத்தான் குன்றுகள் தோறும் முருகனைப் பார்க்கும் பிடிமண் மரபு.. தமிழர்களது மரபாயிற்று. நாடுகள் கடந்தும் இம் மரபு இன்றளவும் போற்றப்படுகிறது.

## ஏதேனும் சான்று தரமுடியுமா?

ஒன்னாத் தெவ்வர்
முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற்
களிறெறிந்து
வீழ்ந்தெனக்
கல்லே
பரவின் அல்லது
நெல் உகுத்து வழிபடும்
கடவுளும்
இலவே!

புறநானூறு... 335வது பாடலைப் படி.. புரியும்.

## சான்று கேட்டால்... செய்யுளாகத் தருகிறாயே! அதற்கான பொருளை எனக்குப் புரியும்படி சொல்லேன், தெரிந்து கொள்கிறேன்.

இந்தப் புறநானூற்றுச் செய்யுளில் உள்ள செய்தி தமிழர்களுக்கு மிக இன்றியமையாதச் செய்தி.

தமிழ் இனத்தின் மீது பண்பாட்டுப் படையெடுப்பு நிகழ்த்த நமது தமிழர்களின் வழிபாட்டு மரபில் நுழைக்க முற்பட்ட ஓர் அந்நிய வழிபாட்டு மரபை கடுமையாக எதிர்த்த பாடலிது.



**அப்படி.. எந்தப் பழக்கத்தை அவர்கள் புகுத்த வந்தார்கள்?**

'நெல்தூவி வழிபட வேண்டும்' என்கிற பழக்கத்தைத்தான் அவர்கள் புகுத்த வந்தார்கள்.

**இந்தப் பழக்கம்.. வேறு சங்கப்பாடல்கள் சிலவற்றிலும்.. சிலப்பதிகாரத்திலும்கூட வருகிறதே!?**

எதையும் முறையாகப் படிக்காமல்..நம் இன வரலாறு பற்றித் தெரியாமல் இருந்தால்.. இப்படித்தான் கேள்வி கேட்பாய்.

சங்க இலக்கியப் பாடல்களிலேயே.. தமிழர்களின் தூய வாழ்வியலில் எழுதிய பாடல்களும் உள்ளன. வந்தவர்களின் சூழ்ச்சிகளால் மாசுபட்ட வாழ்வியலில் எழுதிய பாடல்களும் உள்ளன.

எது காலத்திற்கு முந்தி. எது காலத்திற்குப் பிந்தி என்கிற தேடல்களோடு படித்தால்தான் உண்மை விளங்கும்.

இந்தப் பாடலின் காலத்திற்குமுன் தமிழர்களுக்கு நெல்தூவி வழிபடுகிற மரபு இல்லவே இல்லை.

இதைக் கொண்டு வந்து.. நம் இனமற்றவர்கள்.. தமிழ் வாழ்வில் திணிக்க முற்படுகிறபோது.. மாங்குடி கிழார் என்கிற தமிழின விழிப்புணர்வு பெற்ற புலவர் வெகுண்டெழுகிறார். பாவாணர் போல.. பெருஞ்சித்திரனார் போல. யாரிடம் வந்து உன் மரபைத் திணிக்க முயற்சி செய்கிறாய். எம் தமிழினத்தின் வழிபாட்டு மரபு என்ன தெரியுமா?

எம் மண்ணைக் காக்க, எம் இனத்தைக் காக்க.. தம் இன்னுயிரைத் தருகிற மாவீரர்களுக்கு நன்றி செய்கிற மரபுதான் எங்கள் வழிபாட்டு மரபு.





ஆம்..யானையின் மீது வருகிற எதிரியை.. தன் நாட்டின் எல்லைக்குள் நுழையவிடாமல் தடுத்துப் போரிடுகிற வீரன் பகைவனையும்.. பகைவனின் யானையையும் வெட்டி வீழ்த்திய வெற்றிக் களத்தில் மார்பில் காயம் பட்டு வீரச்சாவு அடைந்தான் எனில்...

அந்த மாவீரனைப் புதைத்த இடத்தில் நடுகல் நட்டு வழிபடுகிற மரபுதான் எங்கள் தமிழர்களின் மரபே தவிர..


இந்த நெல்போட்டு வழிபடுகிற மரபையெல்லாம் எங்களிடம் வந்து நீட்டுகிற வேலையை வைத்துக் கொள்ளாதே என்று கண்டிப்பதான பாடல்தான் இது!

## 'சூரசம்ஹாரம்' என்று நடைபெறுவதும் போர் செய்வது போல்தானே உள்ளது?

**ஆ**மாம்.. உண்மைதான். தமிழ்நாட்டில்தான் இதனை சூரசம்ஹாரம் என்கிறோம். கேரளாவில்.. குறிப்பாக பாலக்காட்டுப் பகுதிகளில் இதனையே, 'சூரன் போர்' என்று இன்றும் அழகு தமிழில் உச்சரிக்கிறார்கள்.

**'நனியிரும் பரப்பின்**
**மாக்கடன் முன்னி**
**அணங்குடை யவுண ரேமம்**
**புணர்க்கு**
**சூருடை முழுமுதல் தடிந்த**
**பேரிசைக்**
**கடுஞ்சின விறல்வேள்**
**களிறார்ந்தாங்கு'**

என்று முருகனின் கடற்போர் ஆற்றல் குறித்து பதிற்றுப்பத்து (11.36) பதிவு செய்துள்ளது.



'முருகன் என்னும் ஓர் இனக்குழுத் தலைவன் தங்களது மக்களுக்கு இன்னல் விளைவித்த இன்னோர் இனக்குழுவைச் சேர்ந்தவனாகிய சூர பன்மனை அழித்த நிகழ்வை' என.. ஆய்வறிஞர் கௌதம சித்தார்த்தன் **'முருகன் - விநாயகன் - மூன்றாம் உலக அரசியல்'** என்ற நூலில் இதனைப் பதிவு செய்துள்ளார்.

தமிழறிஞர் பெ. மாதையன் அவர்களும் 'முருகன் சூர் கொன்ற செய்தி மன்னரின் போர்ச் செயலுக்கு உவமையாகப் பதிற்றுப் பத்து, புறநானூறு இரண்டிலும் கூறப்பட்டுள்ளது' என்கிறார்.

இந்தப் போரில் என்ன நடந்தது..இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடும் முருகனின் இந்தச் சூரன்போர் போலச் செய்தலாக.. தமிழரின் வாழ்வியல் மரபில் தொடர்ந்து வருவதற்கான காரணம் என்ன என்பதெல்லாம்.. மானுடவியல் நோக்கில் இன்னும் ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.

## முருகன் மனிதன் என்றால் அவனைப் பெற்றவர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் ஏதேனும் சங்க இலக்கியத்தில் உள்ளனவா?

*முருகன் தாய் பற்றிய குறிப்பு உள்ளது. முருகனைப் பெற்றெடுத்தத் தாயின் பெயர் 'கொற்றவை' என்கிறது.. திருமுருகாற்றுப்படை.

**'வேல்போர்க் கொற்றவைச் சிறுவ'**
திருமுருகாற்றுப்படை - 258

## முருகனுக்கு முன் கொற்றவைத் தாய் வேறு பிள்ளை ஏதும் பெற்றதாக சான்று உள்ளதா?

**இல்லை, சங்க இலக்கியத்தில் கொற்றவையின் பிள்ளை முருகன் என்பதற்கான சான்று மட்டுமே உள்ளது.**



## ‘பிள்ளையார்’ என்ற சொல் யாரைக் குறிப்பதாம்?

அகநானூறு களிற்றியானை நிரை மூலமும் உரையும் என்ற நூலில் பக்298 - 299ல் உள்ள குறிப்பை மட்டும் இதற்குச் சான்றாகத் தருகிறேன்.

வேலன் வேலை ஏந்தி நின்று ஆடுபவன்,
இவன் படிமத்தான்.
பூசாரி என அழைக்கப்படுவான்.

'பிள்ளையார் வேலைத்
தனக்கு அடையாளமாகக் கொண்டு
திரிதலின் வேலன் என்றார்'
திருமுருகாற்றுப்படை - 222 என்னும் நச்சினார்க்கினியரின் உரையினின்றும் வேலன் எனும் பெயர்க்குரிய காரணத்தை அறிந்து கொள்ளலாம்.

மதுரைக் காஞ்சி 611ஆம் அடியின் உரையிலும் இப்பெயர் காரணம் இவ்வாறே கூறப்பட்டது.

பிள்ளையார் - முருகப்பெருமான்.

## முருகன் எதன்மேல் ஏறிச் சென்றான்?

முருகன் யானையின் மீது ஏறிச் சென்றான்.

## உண்மையாகவா?

உண்மையாகத்தான் சொல்கிறேன். நானா சொல்கிறேன். சங்க இலக்கியப் புலவர்கள் சொல்கிறார்கள். அதை நான் சொல்கிறேன்.



'கடுஞ்சின வாள்வேள்
களிறு ஊர்ந்தாங்கு
என்கிறது'
பதிற்றுப்பத்து : 11.6

'சேயுயர் பிணிமுகம்
ஊர்ந்து அமர் உழக்கி'
என்கிறது'..
பரிபாடல் : 5.2

'பிணிமுக மேற் கொண்டவுணர்' என்கிறது சிலப்பதிகாரம் - 9

பிணிமுகம் முருகனது ஊர்தியாகிய யானையின் பெயர்..

பிணிமுக ஊர்தி - புறநானூறு : 56,8

ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி : திருமுருகாற்றுப்படை - 247

பிணிமுகம் ஊர்ந்த
வெல்போர் இறைவ - பரிபாடல் : 461

பத்துப்பாட்டு கழக வெளியீட்டில் பிணிமுகம் என்பதனைப் பட்டம் எனக் கொண்டு அதனுடைய யானை என்றார் நச்சினார்க்கினியர்.

சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து என்றும் பிணிமுக ஊர்தி ஒன்செய் யோனும் எனப் பிறாண்டும் வருதல் காண்க

பிணிமுகம் என்பதற்குப் பெரும்பாலோர் மயில் என்றே பொருள் கூறுவர்.



பிணிமுகம் என்பது முருகன் ஏறும் யானை ஒன்றற்கே பெயர் என்பாரும் உளர்.

**பிணிமுகம் வாழ்த்தும் வழக்கத்தை**
**'கடம்பும் களிறும் பாடி'**
(தொல்காப்பியம் பொரு சூ16.ந.மேற்) என்பதனானும் அறிக.

முருகன் போரிடச் செல்கையில் யானைமீது சென்றான் என்பதை இச் சான்றுகளால் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

## முருகனுக்கான பழந்தமிழ்ப் படையல் முறை குறித்து ஏதேனும் செய்திகள் உள்ளனவா?

**மறிக்குரல் அறுத்துத் தினைப் பிரப் பிரீஇ : இது குறுந்தொகை :** 263


## இதற்கு என்ன பொருள்?

**ஆ**டு அறுத்து முருகனுக்குப் பலி கொடுத்திருக்கிறார்கள் என்று பொருள்.

குறுந்தொகை : 362ல் 'சிறுமறி கொன்று' என்பதும் முருகனுக்கு ஆடறுத்துக் குருதிப் பலி கொடுத்ததை உறுதி செய்கிறது.

அய்யா இரா. இராகவையங்கார்.. **மறிக்குரல் அறுத்து** என்பதற்கு வெள்யாட்டுக் குட்டியின் கழுத்தை அறுத்து என்றும்.. **சிறுமறி கொன்று** என்பதற்கு ஆட்டின் சிறிய குட்டியைக் கொலை செய்து என்றும் உரையெழுதியுள்ளார் என்பதையும் காண்க. பக்426 - பக்.587

பத்துப்பாட்டு ஆராய்ச்சி எழுதிய தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார்..




93

தெய்வங்கள்

ல் கார்த்திகேயன் அல்லது சுப்பிரமணியனுடைய பிறப்பைப் பற்றிய
ப்புகள் காணப்படுகின்றன. அந்நூல்களில் அவன் சிவன் அல்லது
னியின் மகன். எனவே வடநாட்டில் சுப்பிரமணிய வழிபாடு உருத்திர
பாட்டிலிருந்து தோன்றி இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. தமிழ்
டிலே சிவ வழிபாடு பெருவழக்குப் பெற முருக வழிபாடு குறைவ
ற்று. முருகனுடைய இடத்தை ஆரியக்கடவுளாகிய கந்தன் கொண்டனன்.
துப்பாட்டு எழுந்த காலத்திலே முருகனே மக்களின் தெய்வமாக இருந்தனன்.
வன் வழிபாடு பெருவழக்குற்றிருந்தது. அக்காலப் பகுதிக்குப் பின்னர்
வன், திருமால் ஆகிய இரு கடவுளருடைய வழிபாடும் சிறப்புற்றது.

"குறிஞ்சிநில மக்களால் செய்யப்பட்டதாக மேலே கூறப்பட்ட முருக வழிபாட்டில் வேதங்களிலோ ஆகமங்களிலோ அறிவுபெற்ற புரோகிதர்கள் இடம் பெறவில்லை என்பது கவனத்திற்குரியது.

குறிஞ்சி நில மக்கள் தாங்கள் தொன்று தொட்டு வழிபட்டு வந்த முறையிலேயே வழிபட்டு வந்தார்கள்" என்று தம் ஆய்வுரையில் (பத்துப்பாட்டு ஆராய்ச்சி : பக்.510) கூறுகிறார்.

அத்தகைய வேட்டுவ வழிபாட்டு மரபை உள்வாங்கி உருவாக்கப்பட்டதுதான் கண்ணப்பநாயனார் புராணம். ஒரு வழிபாட்டுக்குரியவரை இன்னொரு வழிபாட்டுக்குரியவராக மாற்றுகிற அந்தக் கதைதான் இது..

பொத்தப்பி நாடு. உடுப்பூர். குறவர் குடி. வேட்டை வாழ்வு. புலிக்குட்டிகளோடும் யானைக் கன்றுகளோடும் விளையாடி மகிழும் குழந்தைகள் ஊரில், நாகன் - தத்தை இருவருக்கு நீண்ட காலமாய் குழந்தை இல்லை.

வருந்தும் அவர்கள் தம் குலக்கடவுளான
**முருகுஅலர் அலங்கல் செவ்வேள்**
**முருகவேள் முன்றில் சென்று..** (10)


"முருகா! எங்களுக்கு பிள்ளைப்பேறு தா" - என்று

**ஊனம் இல்பலிகள் போக்கி**
**உறுகடன் வெறியாட்டோடு..** (13)

**வாரணச் சேவலோடும்**
**வரிமயில்களையும்..** (11)
காணிக்கையாகச் செலுத்தியும் இறைஞ்சுகிறார்கள்.







பிறக்கிறான்.. வளர்கிறான்.. திண்ணப்பன்.
முருகனை வேண்டிப் பிறந்த திண்ணப்பன்

**'கங்குல்**
**புலரஊன் உணவு நல்கி..** (27)
செல்லமாய் வளர்க்கப்படுகிறான்

**அடி தளர்வுறு கரு உடையன**
**அணையுறு பிணை அலையார்** (86)
நாளும் கொன்று உண்ணும் குடிதான் அது. ஆனாலும் கருவுற்ற உயிர்களைக் கொல்லத்துணியாத..

**வெடிபட விரி சிறுகுருளைகள் மிசைபடுகொலை விரவார்** (86)
குழந்தை விலங்குகளைக் கொல்லத் துணியாத
அறமறம் வாய்ந்தக் குடிதான் திண்ணப்பன் குடி.

**கோட்டம்இல் என் குல மைந்தன் திண்ணன்**
**எங்கள் குலத் தலைமை யான் கொடுப்பக் கொண்டு** (50)

ஆம். அந்தக் குடியில் தந்தைக்குப்பின் தலைமை தாங்க வேண்டிய திண்ணப்பன் கதையின் முடிவில் என்ன ஆகிறான்..

**இங்கும் அத்தேவர் தின்ன**
**இறைச்சி கொண்டேகப் போந்தான்**
**நம் குலத்தலைமை விட்டான்**
**நலப்பட்டான் தேவர்க்கு என்றான்** (116)

நம் குலத் தலைமை என்பது உடுப்பூரின் தலைமைப் பொறுப்பு என்றும் ஆகிறது. குலத்தலைமையான முருகன் என்றும் ஆகிறது.



முருகனை வேண்டிப் பிறந்தவன் திண்ணப்பன், முருகனை வணங்கிய வரை அவன் திண்ணப்பன். முருகனை மறந்த பிறகு அவன் கண்ணப்பன்.

## தொன்று தொட்டுத் தமிழர்கள் வழிபட்டு வந்த முறையில் என்ன நேர்ந்தது?

என்ன நேர்ந்ததா.. என்ன என்னவெல்லாமமோ நேர்ந்தது.


அவற்றைக் குறித்து நான் சொல்வதைக் காட்டிலும் 'தமிழர் சால்பு' என்ற நூலில்.. ஈழத்துத் தமிழறிஞர் சு.வித்தியானந்தன் அவர்கள் 'தெய்வங்கள்' என்ற இயலில் கூறியுள்ள ஆய்வுச் சிந்தனைகளில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

மிக விழிப்பாக இவற்றைப் படியுங்கள்.
பக்கம் - 85 "முருகனைத் தவிர மற்றைய திராவிடத் தெய்வங்களுடைய பெயர்கள் இப்பொழுது எமக்குக் கிடைக்கவில்லை. சங்க காலத்திலே அவை யாவும் ஆரியத் தெய்வங்களோடு தொடர்பு படுத்தப்பட்டுத் தமக்குரிய சிறப்புத் தன்மைகளை இழந்திருத்தல்கூடும்.

சங்க காலத்தின் பிற்பகுதியிலே முருகன், சிவனின் மகனான கந்தனோடு ஒன்று படுத்தப் படுகின்றான்.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களின் காலத்திற்குப் பின்னர் வருணனும் இந்திரனும் அறவே மறைந்து விடுகின்றனர். சிவன் ஒரு நிலத்திற்கேனும் உரிய தெய்வமாகக் கருதப்படாதது கவனிக்கத் தக்கது. சங்க நூல்களில் மிகச் சில இடங்களிலேயே சிவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

ஆனால் ஓரிடத்திலேனும் ஒரு நிலத்திற்குரிய தெய்வமாகக் கூறப்படவில்லை.



குறிஞ்சி நில கடவுளாகிய முருகனே மக்களின் உள்ளத்தை மிகவும் கொள்ளை கொண்டவன். பத்துப்பாட்டில் நான்கு இடங்களிற் சிவனைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். இந்த நான்கு இடங்களிற்கூட 'சிவன்' என்ற பெயர் வழங்கப்படவில்லை.

பக் - 95 நற்றிணையில் சிவனைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை.

நானூறு பாக்களைப் பாடிய நூற்றெழுபத்தைந்து புலவரும் சிவனைப் பற்றித் தாம் அறிந்திருந்தமைக்குச் சான்றாக ஒரு செய்தியையும் தரவில்லை. இவ்வேதுக்களால் சங்க காலத்தில் சிவ வழிபாடு அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை எனக் கொள்ளலாம்.

பக் - 92, திராவிடரின் கடவுளான முருகனுக்கும் பார்ப்பனருக்கும், யாகங்களுக்கும் ஒருவகையானத் தொடர்பும் இல்லை. ஆனால் மேற்கூறப்பட்ட திருமுருகாற்றுப் படையின் பகுதியில் அவன் பார்ப்பனர் பாதுகாவலனாகக் கூறப்படுகிறான்.

தமிழ் நாட்டிலே சிவ வழிபாடு பெருவழக்குப் பெற முருக வழிபாடு குறைவதாயிற்று. முருகனுடைய இடத்தை ஆரியக்கடவுளாகிய கந்தன் கொண்டனன். பத்துப்பாட்டு எழுந்த காலத்திலே முருகனே மக்களின் தெய்வமாக இருந்தனன். அவன் வழிபாடு பெருவழக்குற்றிருந்தது. அக்காலப் பகுதிக்குப் பின்னர் சிவன், திருமால் ஆகிய இரு கடவுளருடைய வழிபாடும் சிறப்புற்றது.

**அதானே! குருதிப் பலியிட்டு வழிபடுகிற முருகன் எப்படி அவர்களுக்குப் பாதுகாவலன் ஆவான்?**

**நீ** ஏமாந்திருந்தால் அப்படித்தான் கதை கட்டுவார்கள்.

போர்க்கால வாழ்வியலில்.. நிலையாமையை மய்யப்படுத்தித் தமிழ் மன்னர்களுடைய மூளைகளிலும்.. தமிழர் வாழ்வியலிலும் அன்றே புகுந்து.. கருத்துருவாக்கத் தளத்தில் எவ்வளவோ செய்துவிட்டார்கள்.



ஒரு தமிழ்மன்னன் யாருக்கும் பணியமாட்டாத பெரிய வீரனாம். ஆனால்.. அவன் ஒரே ஒருவனுக்கு மட்டும் பணிவானாம்.

யாருக்கா? பார்ப்பார்க்கு மட்டுமாம்!

'பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே!'
என்ற பதிற்றுப்பத்து : 63ன் கருத்திது.

'ஆர்புனை தெரியனின் முன்னோரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்' புறம் - 6, புறம் - 43

இறைஞ்சுக பெரும
நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே. புறம் - 6

பார்ப்பனர் நோகும்படி ஒன்றைச் செய்ய மாட்டோம். பார்ப்பனர்களுக்கு மட்டுமே தலை குனிவோம். இவை மட்டுமல்ல.. தமிழனுக்குத் தமிழன் போரிடுகிற போதும்கூட.. பசுக்களையும், பசுக்களின் இயல்புடைய பார்ப்பனர்களையும்.. பாதுகாப்பான இடத்தில் இருக்கச் செய்துவிட்டுதான்.. பங்காளிச் சண்டையில் செத்து மடிந்திருக்கிறார்கள் தமிழர்கள்!

ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும் என்று - புறநானூறு : 9 இதனைப் பதிவு செய்கிறது.

இவ்வளவு பாதுகாப்பாக.. அவர்களை உழைக்காமல்.. உடல் நோகாமல் உட்காரவைத்து உழைத்துப் போட்ட தமிழர்களுக்காக அவர்கள் எவ்வளவு நன்றியோடு இருந்திருக்கிறார்கள் என்பதற்கான சாட்சி முருகன் வரலாற்றில் அவர்கள் செய்திருக்கும் புராணக் கதைகளே!



கொற்றவை என்ற தமிழச்சிக்குப் பிறந்தத் தமிழ் முருகனை.. எவ்வளவு இழிவான முறையில் பிறந்தான் என்று கதை கட்டியிருக்கிறார்கள் தெரியுமா? நம் இலக்கியங்களுக்குள்ளாகவே வந்து அதனைச் செய்திருக்கிறார்கள்! அதுதான் கொடுமை!

முருகனுக்கு இரண்டு மனைவிகள் என்றும் கதை கட்டியிருக்கிறார்கள். பரிபாடலில்..

ஒரு புலவனுக்கு அதை ஏற்க மனமில்லை.

என் தமிழ் முருகனுக்கு எப்படியடா இப்படியொரு பெண்ணைத் திணித்தீர்கள் என்ற கோபம் அவனுக்கு. அவன் சினந்து எழுதிய வரிகளின் பொருள் இதோ..

வள்ளியின் பக்கமே நிற்கிறான் முருகன்.

தன் பக்கம் வராத முருகனை தேவசேனை தொழுது வணங்குகிறாள். ஊடலால் சில பேசுகிறாள். வஞ்சனை உடையவனே நீ வாழ்க! என்று விலகிப் போகிறாள்.

முருகன் ஊடிச் சென்ற தேவசேனையிடம் போகிறான். தன் மாலை அவள் காலில் விழும்படி வீழ்ந்து வணங்குகிறான் முருகன். ஊடல் தீர்ந்த தேவசேனை மகிழ்ந்து அவனைத் தன் மார்பில் சாய்க்கிறாள்.

கொதித்து எழுகிறாள் வள்ளி. அவளிடமிருந்து அவனை இழுத்து இரு கைகளையும் பிணைத்துக்கொண்டு மாலையையே கம்பாக்கி அவனை விளாசுகிறாள். இனி அவளிடம் செல்லாதே என்று.
நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வள்ளியோடு வந்திருந்த அவளது மயில் தேவசேனை மயிலைப் போய் தாக்குகிறது. வள்ளியின் கிளிகள் அவளது கிளிகளைத் திட்டித் தீர்க்கின்றன.





வள்ளியின் குன்றத்து வண்டுகள் அவளது தலையில் உள்ள பூக்களின் வண்டுகளோடு மோதுகின்றன. வள்ளியின் தோழியர் தேவசேனையின் தோழிகளை அடித்து நொறுக்குகிறார்கள். தேவசேனைத் தோழியர் மோத வந்ததும்..

மயில் மென்மையான வள்ளியின் தோழியர் யானையின் சினத்தில் துணிகிறார்கள். குதிரைகளைப் போல் பாய்கிறார்கள். குதிரைகளின் கடிவாளக் கயிறுகளையே தாக்குவதற்குத் தேர்ந்தெடுத்து வெளுத்துக் கட்டுகிறார்கள்.


வில்லினில் அம்புகளை விசையுடன் இழுத்து அடிக்கிறார்கள். தங்கள் தோள் வளையங்களையே ஆயுதங்களாக்கிப் பின்னுகிறார்கள். அடி பொறுக்க முடியாத அவளது தோழியர் நடுநடுங்கி முருகனிடம் சரணடைகின்றனர்.

தேவசேனையை வீழ்த்திய வள்ளியின் வெற்றியை..

"இம்மலை குறிஞ்சி நிலமாதலின் இங்கு வாழும் மக்களாகிய குறவர் பெற்ற மகளிர் வள்ளியின் தோழியர் வீரமும் பெருமிதமும் பொருந்திய கொடிச்சியராவர். அவர்கள் உண்டாக்கிய போரினால் வெற்றியை அடைந்தனர். குறிஞ்சிக்குரிய இச்சூழ்நிலை குறிஞ்சிக் கிழவோனாகிய வெற்றி வேலையுடைய முருக வேளுக்குப் பெரிதும் பொருந்துவதாயிற்று என்றார் ஆசிரியர்.

இந்தப் பாடலில் புலவர்.. வேறு யாரையும் அடிக்கவில்லை..தமிழ் முருகன் வள்ளியை மீறி பொய்யாய் ஒருத்தியைத் திணித்து கதை கட்டினார்களே அவர்களைத்தான் அடித்து நொறுக்கியிருக்கிறார்.

**'இகலின் இகந்தாளை**
**அவ்வேள் தலைக் கண்ணி**





திருந்து அடி தோயத் திறை கொடுப்பானை
'வருந்தல்' என அவற்கு
மார்பு அளிப்பளை,
'குறுகல்' என்று ஒள்ளிழை
கோதை கோலாக
இறுகிறுக யாத்துப் புடைப்ப;
ஒருவர் மயில் ஒருவர் ஒண் மயிலோடு ஏல,
இருவர் வான் கிளி ஏற்பல் மழலை,
செறி கொடைமேல் வடு சென்று பாய்ந்தன்றே,
வெறி கொண்டான் குன்றத்து வண்டு

வள்ளியின் பாங்கியரும் தேவசேனையின்
பாங்கியரும் இகலுதல்

தார் தார் பிணக்குவார்; கண்ணி ஓச்சித் தடுமாறுவார்;
மார்பு அணி கொங்கை வார் மத்திகையாப் புடைப்பார்;
கோதை வரிப் பந்து கொண்டு எறிவார் -
பேதை மட நோக்கம் பிறிதாக, ஊத
நுடங்கு நொசி நுசுப்பார் - நூழில் தலைக்கொள்ள;
கயம்படு கழழ் சென்னிக் களிற்று இயல் கைம்மாறுவார்;
வயம்படு பரிப் புரவி மார்க்கம் வருவார்;
வரி சிலை வளைய மார்பு உற வாங்குவார்;
வாளி வாளிகள் நிலைபெற மறலுவார்;
தோள் வளை ஆழி சுழற்றுவார் -
மென் சீர் மயில் இயலவர்
வாள் மிகு வய மொய்ம்பின்
வரை அகலத்தவனை - வானவன் மகள்
மாண் எழில் மலர் உண்கண்
மட மொழியவர் - உடன் சுற்றி,
கடி சுனையுள் குளித்து ஆடுநரும்

## இதிலிருந்து என்ன தெரிகிறது?

பொய் தோற்றது.
உண்மை வென்றது.

## எது உண்மை? எது எது உண்மை?

முருகன் உண்மை. முருகன் தாய்.. கொற்றவை உண்மை. முருகன் குமரிமலையில் ஒரு மலையை ஆண்டவன், உண்மை. யானையின் மீதும் நாவாயின் மீதும் சென்று முருகன் போரிட்டது உண்மை.

நடுகல் வழிபாட்டு மரபில் அவன் தமிழர்களால் வணங்கப்பட்டது உண்மை. குமரி.. ஆழிப்பேரலையில் பெருந்தொகை மூதாதையர்களை இழந்தோம் என்பது உண்மை. அவர்களே தென்புலத்தார் என்பது உண்மை. அவர்களின் நினைவுகளோடு தென்புலத்திலிருந்து இடம் பெயர்ந்தோரே நாம் என்பது உண்மை. இடம் பெயர்ந்த நாம் எங்கே மலை பார்த்தாலும் அங்கே முருகனைப் பார்த்தல் உண்மை.

**முருகன்**
உலகத் தமிழினத்தின்
**'பெரிய கடவுள்'**
உண்மை உண்மை உண்மை.



"

தமிழ் இலக்கியத்தில்
முக்கிய கடவுள் முருகன்
என்பதை அறிவுமதி
ஆதாரங்களுடன் நிரூபித்துக்
காட்டியிருக்கிறார்

"

அய்யா நல்லகண்ணு

தர்மலிங்கம் அறவழித் தொண்டு
மற்றும் கல்வி அறக்கட்டளை

நான்காம் தமிழ் பதிப்பகம்